காட்சி : 1 இடம் : சிறை

## நிழல் காட்சியில்

பாத்திரங்கள் :: 1. காவலர், 2. காவலர், 3. முத்தய்யா
(இரவு மணி பன்னிரண்டு அடித்து முடிகிறது.

கடமை தவறாக் காவலர்கள் சிறை வாசலில் அங்கும் இங்கும் ஏந்திய துப்பாக்கியுடன் இயந்திரம்போல் நடமாடுகின்றனர். கைதி ஒருவன் பதுங்கிப் பதுங்கிவருவது தெரிகிறது. பதுங்கி வந்த உருவம் திடீரென ஓடுகிறது. காவலன் ஒருவன் அது கண்டு தனது ஊதலை எடுத்து ஊது கிறான்)

காட்சி : 2 நிழல் காட்சி

(கைதி ஓடுகிறான். அங்கும் இங்கும் பல இடத்தில் இருந்து ஊதல் சப்தம் கேட்கிறது. காவலர்கள் துரத்துகின்றனர். கைதி சுவர் ஒன்றைத் தாண்டிக் குதித்து ஓடுகிறான். அங்கும் இங்கும் காவலர்கள் பரபரப்புடன் ஓடுகிறார்கள்.)

குறிப்பு: இக் காட்சி பல தடவை மாற்றி மாற்றிக் காட்டவேண்டும். காவலர்துப்பாக்கியால் சுடுவதையும் துப்பாக்கிச் சப்தம் கேட்பதையும் காட்ட வேண்டும்.

**காட்சி: 3 இடம்: வீதி (பஸ் ஸ்டாப்]**

பாத்திரங்கள்: 1. அப்டுடேட், 2. சிவகாமி, 3. சிறுவன் 4. முத்தய்யா (மாறுவேஷம்) மற்றும் சிலர்
(சிறுவன் ஒருவன் பேப்பர் விற்கிறான்.)

சிறுவன்: டெய்லி டுப்! சார் டெய்லி டுப்...ஓரணா! ஓரணா! கைதி முத்தய்யா காவலில் இருந்து தப்பினான்! ஓரணா...பெண் ஆணாக மாறி னாள்! ஓரணா!

அப்டுடேட் : டேய்...நில்லு ஒரு பேப்பர் குடு...

(பலர் பேப்பர் வாங்குகின்றனர்...பாக்கெட்டி லிருந்து ஓரணாவைக் குடுத்து பேப்பர் வாங்கிய அப்டுடேட் பிரித்துப் படிக்கிறான்)

சிறு: சார், இந்தக் காசு செல்லாது சார்...
(பேப்பரைப் படித்துக்கொண்டே அப்டுடேட்)

டேட் : எவன் சொன்னான்?

சிறு : நான்தான் சார் சொல்றேன் செல்லாது!
(பேப்பரைப் படித்தவாறு)

டேட் : இன்னொரு தரம் சொல்லாதே! சர்க்கார் காசைச் செல்லாதுன்னு சொன்னா உள்ளேதள்ளிடுவான்.

சிறு : இந்தக் காசு செல்லும்ன்னு சொன்னா உங்களை உள்ள தள்ளிடுவாங்க!

டேட் : அடச்சீ...செல்லும் போடா...

சிறு : அடச் சரிதான்ய்யா வேற காசைக் குடுய்யா!

டேட் : ஏண்டா செல்லாது. இந்தா பேப்பர், குடு காசை!

சிறு : மஞ்சள் அணா செல்லாதுன்னு தெரியாதாய்யா... சரிதான்...இப்பத்தான் புரியுது...யோ, நீ தினசரி மஞ்சள் அணாவைக் குடுத்து பேப்பர் வாங்கிப் படிச்சுட்டு செல்லாதுன்னு சொன்னதும் பேப்ப ரைத் திருப்பிக் குடுக்குற ஆளுல்ல...

டேட் : சரிதான் போடா...நான் ஆறு மாசமா இந்த ஒரு அணாவை வைச்சே வேர்ல்ட் நியூஸையே தெரிஞ்சுக்கறேன்...இவன் இன்னிக்கி இதை அதிசயமா சொல்ல வந்துட்டான்!

(கையிலிருந்த சிகரெட்டின்னிலிருந்து பீடிஒன்றை எடுத்துப் பொருத்துகிறான்...பஸ் ஸ்டாண்டில் நிற்பவர் இருவர் பத்திரிகையைப் விரித்துப் படித்துக் கொண்டே பேசுகிறார்கள்.)

ஒருவர் : பாத்தீங்களா சார் அக்ரமத்தை! போலீஸ் காவல்ல இருந்து தப்பிச்சுட்டானாம்! பட்பட்டுன்னு மூணு ரவுண்ட் சுட்டாங்களாம்!

டேட் : கொஞ்சம் விவரமா சொல்லுங்க சார்...

ஒரு : முத்தய்யான்னு பேராம். ராத்திரி பனிரண்டு மணிக்குத் தப்பிச்சுப் போயிட்டானாம்! ஓடும் போது போலீஸ் சுட்டாங்களாம்!

இன்னொருவர் : மூணு தரம் சுட்டும் தப்பிச்சுட்டானே! அவன் சாமர்த்தியசாலிதான்!

(இவர்கள் பேச்சை அங்கு வந்த சிவகாமி நின்று கவனிக்கிறாள்...)

சிவ : அய்யா! அவரு பேரு என்னான்னு சொன்னீங்க?

டேட்ட : முத்தய்யா! ஆமா நீ ஏன் கேக்குறே?

(சிவகாமி பதில் சொல்லாமல் வேகமாகச் செல்கிறாள்...)

இந்தப் பொண்ணுக்கும் அந்தக் கைதிக்கும் ஏதோ கனக்ஷன் இருக்கும்போல இருக்கு!

இன் : ஆமாமா இருந்தாலும் இருக்கும்...காலம் ரொம்பக் கெட்டுப் போச்சு சார்! முத்தய்யாவே பொம்பளை வேஷம் போட்டுக்கிட்டு வந்து ஆழம் பார்க்கிறானோ!

டேட் : இருக்கும் சார்! உலகம்தான் பிரமாதமா கெட்டுப் போயிண்டே இருக்கே! எவன் திருடன் எவன் நல்லவன்னு புரிஞ்சுக்கவே முடியல்ல...

ஒரு : அப்டுடேட்டாக டிரஸ் பண்றவன் அசல் பிக்பாக்கொட்டா இருக்கான்...

(தனது பையைத் தடவுகிறார்...பர்ஸைக் காணாமல் திகைத்து)

ஒரு : பர்ஸ்...அய்யோஎன் பர்ஸ்...!

டேட் : பர்ஸ்...!

(அப்டுடேட் ஓடுகிறான்)

ஒரு : அட பாவி...விடாதே பிடி பிடி...

(பின்னால் துரத்திச் செல்கிறார். நின்று கொண்டிருந்த இன்னொருவர் (முத்தய்யா மாறு வேஷத்துடன்) சிரித்தவாறு பர்ஸை எடுத்துத் தூக்கிப் போட்டுப் பிடிக்கிறான்.)

முத்தய்யா : பாவம்! உலகத்துலே ஒவ்வொருத்தனும் ஒவ்வொரு விதத்திலே கொள்ளையடிக்கிறான்! அகப்பட்டுக்கிட்டா திருடன்! அகப்படாதவங்க பெரிய மனுஷன்...

(சிரித்துக்கொண்டே செல்கிறான்)

## காட்சி : 4 இடம் : சாதாரண வீடு

**பாத்திரங்கள் :** 1. சிவகாமி, 2. பெரியநாயகம்.

(சிவகாமி சின்னஞ்சிறு கண்ணாடி ஒன்றில் தன் முகத்தையும் உடை அலங்காரத்தையும் பார்க்கிறாள். ஆனந்தமாக

(ஆடிப் பாடுகிறாள்—ஆடலும் பாடலும் முடியும் முன்னே அங்கு வந்த பெரிய நாயகம்)

பெரியநாயகம் : சிவகாமி, இன்னிக்கு என்ன விசேஷம்? உன் முகம் ஒரேயடியா சந்தோஷமா யிருக்கே!

சிவகாமி : ஒண்ணுமில்லை மாமா.

பெரி : என்னம்மா என்னிக்குமில்லாம இன்னிக்கு ஒரே சிரிப்பும் கும்மாளமுமா இருக்கே?

சிவ : சும்மாதான்.

பெரி : மானத்துலே மப்பு அடிச்சிருந்தாத்தான் மயில் ஆடும்! மனத்திலே சந்தோஷம் படிஞ்சாத்தான் குயில் பாடும்...என் மருமக சிவகாமி சிரிப்புக்கும் காரணம் இருக்கணுமே......

சிவ : வந்து...வந்து...

பெரி : சும்மா சொல்லும்மா...

சிவ : போங்க மாமா வெக்கமா இருக்கு!...

பெரி : தகப்பனுக்குத் தகப்பனா தாய்க்குத் தாயா மாமனுக்கு மாமனா இருக்கிற எங்கிட்டச் சொல்ல வெட்கப்படுகிற விஷயம்கூட ஒன்று இருக்கா? சும்மா சொல்லு...

சிவ : வந்து...

பெரி : ...ம்...

சிவ : (கண்களைத் துணியினால் பொத்திக்கொண்டு) அத்தான் வரப் போறாரு!

பெரி : யாரு முத்தய்யனா...அந்த ஊதாரிப் பயலுக்கு விடுதலை கிடைக்க இன்னும் ஒரு வருஷம் இருக்கே—

சிவ : மாமா அங்கு சிறையில் இருந்து தப்பிச்சுட்டாராம்.

பெரி : ஆங்...அயோக்கியப் பய...உனக்கு யார் சொன்னது?

சிவ : பத்திரிகையிலே வந்திருக்கு...நான் வேலைக்குப் போயிட்டுத் திரும்பி வரபோது வீதியிலே நின்று படிச்சிக்கிட்டிருந்தாங்க—

பெரி : ஓகோ—! பேப்பரிலே போட்டாச்சா! இந்தாப் பாரு சிவகாமி, நான் ரொம்பக் கோவக்காரன்னு உனக்குத் தெரியும்...அந்தப் பய முத்தய்யா... இந்த வாசலை மிதிச்சான்...அவனைப் பாத்து நீ சிரிச்சேன்னு தெரிஞ்சா நடக்குற சங்கதியேவேறே!

சிவ : மாமா...

பெரி : ஆமா பரம்பரை பரம்பரையா மானத்தோட வாழ்ந்த குடும்பத்து மதிப்பைக் கெடுக்க எனக்கு மகனாப் பிறந்தவன் அவன். திருடி செயிலுக்குப் போனதுமில்லாமே தப்பிச்சுவேறே வந்திருக்கான் அந்தத் தறுதலைப் பயலை நினைச்சுத் தலை சுத்தி ஆட றதும், அத்தான்னு சொல்றதும் ஆத்தி ரத்தை அதிகமாக்குது!

சிவ : மாமா, பெத்த பாசம் உங்களுக்கில்லாவிட்டாலும் அத்தான்ங்கிற பாசம் எனக்கு அடியோட மறைஞ் சிடுமா...

பெரி : மறந்துத்தாம்மா ஆகணும். பாம்பு பார்வைக்கு அழகா இருக்குன்னு நாம் பாசத்தோட பழக முடியுமா...உறவுக்கு அத்தான்தான். ஆனா உலகத்துக்கு அவன் திருடனம்மா திருடன்...

சிவ : ஆயிரம் தவறு செஞ்சாலும் அத்தான் உங்களுக்கு மகன் இல்லேன்னு ஆயிடுமா மாமா?

பெரி : ஆமா, என்னிக்கு அவன் திருட ஆரம்பிச்சானோ அன்னிக்கே அவனைஎன்மகன் இல்லேன்னு முடிவு பண்ணிட்டேன் ... உண்மையாச் சொல்றேன் சிவகாமி, அந்தப் பய இங்க வந்தான்னா நானே முன்ன நின்னு போலீஸிலே புடிச்சுக் குடுத்திடு வேன் ஆமா!

சிவ : மாமா...ஆத்திரத்தை அடக்கி உங்க மனசிலே அன்பை நிறுத்திக் கொஞ்சம் நினைச்சுப்பாருங்க. அத்தானுக்கு உங்களையும் என்னையும்தவிரயாரு மாமா இருக்காங்க ஆதரவு காட்ட?

பெரி : (கோபமாக) அனாதையா திரியட்டும். ஆயுசுபூரா திருடித் திருடிச் செயிலுக்குப் போகட்டும். தெருத் தெருவா பாக்குற சனங்க திருடன் திருடன்னு வசை பாடட்டும். பேப்பரிலே பக்கம் பக்கமாகப் போடட்டும்! செயில்லிலே அவன்உயிர்தேயட்டும்! அவன் சாகட்டும்!

சிவ : அய்யோ...மாமா அப்படிச் சொல்லாதீங்க...உங்க அதிகாரத்திலே அவர் குணத்தைமாத்தமுடியாட்டி என் அன்பினாலே மாத்திடுவேன் மாமா...

பெரி : சிவகாமி! ஒரே வார்த்தையிலேசொல்றேன்...இந்த மாமாஉனக்கு வேணும்னா என் மகனைமறந்திடு. அவன் நிழலைக்கூட நினைக்காதே. முத்தய்யன் முகத்துக்கு நேரே நீ நின்னு பேசினேன்னு தெரிஞ்சா இந்தப் பெரியநாயகம் உன் முகத்தி லேயே முழிக்கமாட்டான்!

(பெரியநாயகம் வேகமாகச் சென்றுவிடுகிறார்).

சிவ : ஆத்திரத்திலே உங்கவைர நெஞ்சுகுமுறுதுமாமா! ஆசையினாலே இந்தப் பேதை நெஞ்சு துடிக்குது மாமா! அத்தான்! அத்தான்! நீங்க திருடன்தான். என் மனசைத் திருடின பெரிய திருடர்தான்! உலகம் உங்களை ஏசினாலும் பேசினாலும் நான் எப்படி அத்தான் மறக்கமுடியும்.

(அழுதுகொண்டே உட்காருகிறாள்.)

## காட்சி : 5

## இடம்: பழைய வீடு

**பாத்திரங்கள்** : 1. முத்தய்யன் 2. அப்டுடேட்

(அப்டுடேட் ஒரு சீட்டுக்கட்டைப் பிரித்து மேசையின் மீதுல்ஒவ்வொன்றாகப் போட்டபடி

அமர்ந்திருக்கிறான். சிகரெட் ஒன்றைப் புகைத்துக்கொண்டே சிரிக்கிறான் முத்தய்யன்.)

முத்தய்யன் : திருடன்...மனிதனாகப் பிறந்தவன் ஒவ்வொருவனும் ஒவ்வொரு கோணத்தில் திருடனாகத்தான் மாறுகிறான்...

அப்டுடேட் : வாத்தியாரே! நீயும் நானும் திருடுறோம். அது கரக்டு. அதுக்காக இருக்கிறவனுக்கெல்லாம் அந்த டைட்டிலைக் குடுக்காதே.

முத் : அப்டுடேட்! உனக்கு அனுபவம் இல்லை! குறுக்கு வழியில்செல்பவன்தான்குபேரனாகமாறுகிறான்... உண்மையோடு உழைத்து வாழ்பவன்உருகிஉருகி கண்காட்சிப் பொருளாகக் காட்சி அளிக்கிறான்.

டேட் : ஏது நீ சொல்றதைப் பார்த்தா ஒவ்வொருத்தனும் திருடனா மாறணும்னு சொல்லுவே போல இருக்கே!கரக்டு...கரக்டு...அதனால்தான் அந்தக் காலத்திலேயே ஔவையார் கிழவி களவும் கற்று மறன்னு சொன்னாப் போல இருக்கு!

முத் : தவறு.களவும் கற்றுமற என்றால் களவைஅகற்று மறந்துவிடு என்றுதான் விளக்கம், ஆனால் இதிலிருந்துஎன்னதெரிகிறது?ஔவையார்இருந்தகாலத்தில்கூட திருட்டுத் தொழில் இருந்திருக்கிறது.

டே : அப்ப திருடறது ஒரு கலைன்னு சொல்லு!

முத் : கலையல்லநண்பாகலையல்ல...மனிதஇனத்திற்கு ஏற்பட்ட நிலை. நீதியற்ற ஒரு சிலர் நிதியைத் தனக்கு உரிமையாக்கும்போது,விதியற்றமனிதன் அதைத் தனக்கெனப் பறித்துக் கொள்கிறான்; மதியற்றவர்கள் அதைக்கண்டு திருடன் என்ற பட்டத்தை அவனுக்குச் சூட்டி விடுகின்றனர். இல்லாதவன் இருப்பவனிடமிருந்து எடுத்துக் கொள்கிறான். இதில் தவறு என்ன இருக்கிறது? இதற்குப் பெயர் திருடுவதா?

டேட் : அப்ப அப்டுடேட்டா புரட்டுன்னு சொல்லு!

முத் : இன்னும் கேள். திருடுவது மனிதன் மட்டுமல்ல! இயற்கையும் திருடுகிறது! சூரியன் ஒரு திருடன்! சந்திரன் ஒரு திருடன்! இன்னும் மரங்கள், மலர் கள், விலங்குகள், பூச்சி இனங்கள், இவைகள் ஒவ்வொன்றும் திருடித்தான் தன் தேவையைப் பூர்த்தி செய்துகொள்கின்றன.

டேட் : ஏது உன் வாதத்தைக் கேட்டாஎனக்குகீல்வாதமே வந்து காலிலிருந்து ஹார்ட் வரைக்கும் ஹீட்டாயி எமனை மீட் பண்ணிடுவேன்போல இருக்கே......

முத் : இன்னும் கேள். கொலை செய்வதுகுற்றம்! ஆனால் நமது அறிவைப் பயன்படுத்தி முட்டாள்களை ஏமாற்றுவது குற்றமென கொள்ளமுடியாது.

டேட் : அப்டூடேட்டா ஒரு ஐடியாசொன்னே! அப்ப நான் பிக்பாக்கெட்அடிச்சது குற்றமில்லே! அதைப்புத்தி சாலித்தனமா நீ வாங்கி வைச்சுக்கிட்டது குற்ற மில்லை.

முத் : பருந்தைப்போல் பறித்துத் தின்பதுகுற்றம். குள்ள நரியைப்போல் தந்திரம் செய்வது புத்திசாலித் தனம்!

டேட் : அப்ப நான் பருந்து! நீ குள்ள நரியா?

முத் : ஆம்! நீ பருந்துதான். பறித்து வந்துவிட்டாய்...... நீ......நீ கொடுத்து வாங்கிக்கொண்டேன் நான்...

டேட் : எதுக்கு வெட்டிப் பேச்சு. நடக்க வேண்டியதைச் சொல்லு...அடுத்தபடி உன் திட்டம் என்ன...?

முத் : தீட்டிவிட்டேன்திட்டம். சிலையிலிருந்துதப்பிவந்த நான் திரும்பவும் போலீசாரால் சிறைப்பிடிக்கப் பட்டுமுன் எனது இதயக் கனவுகள் நிறைவேற வேண்டும்.

டேட் : ஒருவேளை நிசக்கனவாயிட்டா?

முத் : நினைவுகள்தான்கனவாகின்றன!என் நினைவுகள் நிச்சயம் வெற்றி பெறும்...ம்...உனக்கு அம்பல வாணனைத் தெரியுமா?

டேட் : தெரியுமே! சோடா புட்டி கலாட்டாவிலே ஆறு மாசம் உள்ளே போனானே...

முத் ; அவன் இல்லே...

டேட் : ஓ...நீ அந்த ஆளைச் சொல்றியா...நம்ம பிக்பாக் கெட் பரலோகத்தோட மச்சான்... இப்ப வேலூர் ஜெயில்லே இருக்கானே...

முத் : உனக்கு தெரிஞ்சவன் எல்லாம் திருடனும் பிக்பாக் கெட்டும் தானா?

டேட் : நல்லவன்களைப்பத்தி நாம ஏன் தெரிஞ்சுக்கணும்?

முத் : அதுசரி...நான் சொல்றது நகைக்கடை அம்பல வாணனைப்பத்தி...

டேட் : யாரு... நடுத்தெரு மாடிவீடு, அதுதான் ரத்ன மாளிகை. அந்த அம்பலவாணனா...

முத் : அவன்தான். அவனிடம் வைரங்களும் நகைகளும் ரொக்கமும் சேர்ந்து அம்பது லக்ஷம் இருக்கும்.

டேட் : அம்பது லக்ஷமா?

முத் : அதுலே அஞ்சு லக்ஷமாவது நமக்குச் சொந்தமாக வேண்டும்.

டேட் : நாயினா நமக்கு வேண்டாம் அந்த வேலை... அவன் துப்பாக்கி லைசென்ஸ் வைச்சிருக்கான்.

முத் : வைச்சிருந்தா என்ன? அவன் ஒரு ஸ்டண்டு பிக்சர் ஹீரோ ...அந்தத் துப்பாக்கியைஎடுத்துவர்றவனை சுட டூப்ளிகேட்டா ஒரு ஆளுவேணும். அவ்வளவு கோழை அவன்.

டேட் : இந்தாப்பாரு சார்! எனக்கு கொள்ளையடிச்சுப் பழக்கமில்லை...என்னை இதிலே சேக்காதே...

முத் : அப்டுடேட்...நீ ஒரு முட்டாள்!

டேட் : நான் புத்திசாலியா இருந்திருந்தா பிக்பாக்கெட் அடிச்ச பணத்தை உங்கிட்டக் குடுப்பேனா...நீ

அதை யாருக்கோ மணியார்டர் பண்ணிக்கிட்டு பேரைக்கேட்டாக்கூடச் சொல்லமாட்டேன்னு சொல்லுவியா?

முத் : பாத்தியா, முக்கியமான விஷயம் பேசும்போது மூளையைக் குழப்புறியே...நாம் அம்பலவாணன் வீட்டைக் கொள்ளையடிக்கப் போகவேண்டாம். அவன் கிட்ட நல்லவனா நடிச்சு...

டேட் : அவன் மகா சந்தேகப் பிராணி. ஆண்டவனே ஒரு அவதாரம் எடுத்து வந்தாலும் நம்பமாட்டான்.

முத் : நம்பிக்கை ஏற்படும்படி நடித்தால்...

டேட் : எனக்கென்னமோ, உன் திட்டம் வெடிக்குமா... வெத்துவேட்டா புகையுமான்னு சந்தேகமா இருக்கு.

முத் : சந்தேகப்படுறவன்தான் வாழ்க்கையிலே அடிக்கடி ஏமாற்றத்தைச் சந்திக்கிறான். அம்பலவாணனை நம்பவைக்க நாம் ஒரு வேஷம் போடணும்.

(அப்டுடேட் ஒருகுச்சியை எடுத்துக் கத்தியால் சீவுகிறான்.)

டேட் : வேஷம் போடாமத்தான் நீ வெளியே போக முடியாதே...

முத் : அப்டுடேட்...இன்னிக்கிருந்து நான் கமிஷன் ஏஜண்ட் கார்மேகம்...நீ என் காரியதரிசி கண்ணாயிரம்' நாம ரெண்டு பேரும் இன்னிக்கே...

(கத்தி கையில் பட்டதால் அப்டுடேட்டின் கையில் ரத்தம் வருகிறது. ரத்தத்தைக் கண்ட முத்தய்யன்...)

முத் : ரத்தம்...ரத்தம்...அம்மா...அம்மா...

(என்றலறியவாறு... இரண்டு கைகளையும் விரித்துக்கொண்டே... சாய்கிறான்...)

டேட் : என்ன...என்ன

## காட்சி : 6 இடம் : அம்பலவாணர் வீடு

பாத்திரங்கள் : 1. அம்பலவாணர், 2. மெய்யப்பன், 3. மணிவேலன், 4. அன்னம், 5.சிவகாமி.

(மெய்யப்பன் கையில் சாம்பிராணி புகைபோடும் கரண்டியுடன் வந்து ஷோபா செட்டுகளுக்கும் அவற்றில் மாட்டப்பட்டிருந்த படங்களுக்கும் புகை போட்டவாறு பேசுகிறான்.)

மெய்யப்பன் : விடிஞ்சா புகை போடுறது, விளக்குவைச்சா திருட்டுக்கணக்குஎழுதுறது...இந்தவேலை செஞ்சு இப்படி உடம்பை வளர்க்கறதை விட, திருப்பதி வேலையை திருப்தியா செய்யலாம்.

(அம்பலவாணர் வருகிறார்)

அம்பலவாணர் : மெய்யப்பா...

மெய் : ஐயா...

அம் : என்னடா புலம்புறே...திருப்பதி திருப்தின்னு

மெய் : ஆமாங்க... இந்த பாழும் சடலம் பட்டுன்னு போற துக்கு முன்னாடி திருப்பதி பகவானை ஒருதரம் தரிசனம் பண்ணணும்னுசொல்லிக்கிட்டிருந்தேன்.

அம் : டேய் நீ பொய் சொல்றே?

மெய்: என் பேரே மெய்யப்பன். பொய் சொல்வேனோ...

அம் : பேருக்கும் நடத்தைக்கும் சம்பந்தமேஇல்லேடா... நம்ப தலைவர் பேரு காமராசர். அவரு கலியாணமே வேண்டாமுன்னு இருக்காரே...

மெய் : ஒரு வழிக்கு அதுவும் உண்மைதான். உங்கபேரு அம்பலவாணருன்னு. அம்பலம்னா கோயில்,

வாணன்னா பாடுறவரு. கோயில்லே பாடுற வருன்னு அர்த்தம். கோயில்ல பாடுறவரு பண்டாரம்... இப்ப நீங்க பண்டாரமாவா இருக் கீங்க...

அம் : நான் பண்டாரமில்லேடா பண்டார சன்னதிடா.

மெய் : அய்யய்யோ...அந்தப் பேரை வைச்சுக்கிட்டா ஒரு சிலர் என்னமோ ஏதோன்னுசந்தேகப்படுறாங்க—

அம் : அதுவும் சரிதான். ஆமா எல்லா இடத்திலேயும் ஒழுங்கா புகை போட்டியா?

மெய் : இன்னும் புகையுதே...

அம் : கோயிலுக்குத் தேங்கா உடைக்கச் சொன்னேனே உடைச்சியா?

மெய் : உடைச்சேனுங்களே, நாலணாத் தேங்கா ஒரு அணா கற்பூரம்.

அம் : எனக்கொரு சந்தேகம்.

மெய் : உங்களுக்குத்தான் அடிக்கடி சந்தேகம் வருமே?

அம் : நெருப்பில்லாம புகையுமா? நீ தப்பு செய்யறே; அதனாலதான் எனக்கு உன்மேல் சந்தேகம்.

மெய் : நான் அப்படி என்னங்க தப்புச் செய்யுறேன்.

அம் : நீ தனியா எனக்குத் தெரியாம என்னைத் திட்டு றேன்னு நினைக்கிறேன்...

மெய் : சேச் சே...நான் திட்டுற அளவுக்கு நீங்களென்னங்க தப்புச் செய்யுறீங்க—?

அம் : என்னடா இந்த மனுஷன் எல்லா வேலையும் நம்மளையே செய்யச் சொல்றார்...சம்பளம் மட்டும் கம்மியா தர்றாருண்ணு திட்டுறியா?

மெய் : சேச்சே... இந்த பஞ்ச காலத்துலே பத்து ரூபாய் பணமும் மூணு வேளைச் சோறும் போடுறாரே புண்ணியவான்னு பெருமையா பேசிக்கிட்டிருக் கேன்...

அம் : உண்மையாவா...டேய் மெய்யப்பா! ஐயப்பன் சத்தியமா சொல்றேன். நான் செத்த பிறகு என் சொத்துலே உனக்கு ஏதாவது எழுதி வைப் பேன்டா...

மெய் : ஒருவேளை உங்களுக்கு முன்னாடி நான் போயிட்டா...

அம் : மிச்சம்ன்னு முடிவு பண்ணிக்கிறேன். சரி...ஏண்டா அழுக்கு வேட்டியை கட்டிக்கிட்டிருக்கே...லக்ஷாதி பதி அம்பலவாணருடைய அந்தரங்க கணக்கப் பிள்ளை இப்படி பிச்சைக்காரத்தனமா வா இருக் கிறது—?

மெய் : (அசட்டுச் சிரிப்புடன்) வந்து துணியெல்லாம் கிழிஞ்சுபோச்சுங்க—

அம் : அடச்சீ போ என் சரிகை வேஷ்டியை எடுத்துக் கட்டிக்கோ.

மெய் : ஐயாவுக்கு இவ்வளவு அன்பு என் மேல வந்ததே எனக்கு ஐஸ்வரியம் வந்தமாதிரி.

அம் : மெய்யப்பா...

மெய் : அய்யா...

அம் : இப்படி வா...

மெய் : இருக்கட்டுங்க...

அம் : அட சும்மா பக்கந்திலே வாடான்னா...
(மெய்யப்பன் அருகேவருகிறான். அல்பலவாணர் ரகசியக் குரலில்...)

அம் : நேத்து நான் சொன்ன சங்கதிஎன்னாச்சு...

மெய் : வந்து...என்ன சொன்னீங்க...?

அம் : அடாடாடா அதுக்குள்ளே மறந்துட்டியா?

மெய் : யாராவது பாத்தா...

அம் : ஏண்டா பயப்படுறே...?

மெய் : விஷயம் வெளியே தெரிஞ்சுதுன்னா கேவலமாச் சுங்களே...

அம் : தெரிஞ்சாத்தானே...தெரியாம இருக்கட்டுமுன்னு தானே உன்னை அனுப்புறேன்.

மெய் : எனக்கென்னவோ...

அம் : அடாடாடா...இந்த ஒரு விஷயத்துலதான் உன்னைக் கண்டா எனக்குப் புடிக்கல்லே. நானும் ஒருவாரமா உங்கிட்ட பணத்தைக் குடுத்து வாங்கி...வாங்கி...

(சிவகாமி பயத்தோடு வருகிறாள்)

அம் : இந்தா புள்ளே மணி என்ன?

சிவகாமி: எட்டு!

அம் : நீ எத்தனை மணிக்கு வேலைக்கு வரணும்?

சிவ : ஏழு மணிக்கு!

அம் : ஒரு மணிநேரம் லேட்! மெய்யப்பா இவ சம்பளத்துலே ஒருமணி நேரத்தை கணக்குப் போட்டு கட் பண்ணு!

மெய் : நேத்து சாயந்திரம் ஒரு மணி நேரம் அதிகமா வேலை பாத்திருக்குதே...அந்தச் சம்பளத்தைக் கூட்டவா...

அம் : கூட்டவா. தொலைச்சிடுவேன், ஏண்டா ஒருமணி நேரம் இங்கு இருந்தா...அதுக்கும் கட் பண்ணு-

மெய் : நீங்கதானே இருக்கச் சொன்னீங்க...

அம் : அப்படியா தொலையட்டும்விடு...போ உள்ளே!

மெய் : ஏன் எசமான் ஒருமணி நேரத்துக்கு கூட்டு குறைன்னு சொல்றீங்களே. நான் இருபத்திநாலு மணி நேரமும் இங்கேயேதானே இருக்கேன்! எனக்கு கூடவும் இல்லே குறையவும் இல்லியே...

அம் : அது உன் விதி...மெய்யப்பா அது கிடக்குது வீடு (ரகசியமாக) நீ...இப்ப போயிட்டு வர்றியா... இன்னிக்குமத்தியானம் அதில்லாம முடியாதுடா

மெய் : ஐயா...ரொம்ப அசிங்கமா இருக்கு...

அம் : என்னடா அசிங்கம். எனக்கு ஆசை, வாங்கிட்டு வாச் சொல்றேன்.

(அன்னமும், மணிவேலனும் பேட்மிண்டன் ஆடி விட்டு கையில் மட்டையுடன் நாகரிக உடையுடன் வருகிறார்கள்)

அன்னம் : டாடீ...

அம் : வாம்மா வா...உன்னைத்தான் காணோம்னுஎதிர் பார்த்தேன்.

அன் : எதுக்குப்பா?

அம் : நீ பாட்டுக்கு விடிஞ்சதும் காரை எடுத்துட்டு விர்ன்னு பந்தாடப் போயிட்டே, நான் வெளியே போகத் திண்டாடிக்கிட்டிருக்கேன்...

அன் : போன் பண்ணியிருந்தா எர்லியரா வந்தி ருப்பேனே!

மணிவேலன் : மாமா, நான் சொன்னேன், அப்பாகோவிச் சுக்குவாரு...வா சீக்கிரம் போகலாம்ன்னு!

(அன்னம் உள்ளே செல்கிறாள்.)

அம் : மணிவேலா...என் மகளை நீதான் கெடுக்குறே. இந்த மாதிரி ஆட்டத்தையும் ஆடம்பரத்தையும் கத்துக்குடுத்தது நீதான்...உங்கப்பா வயிரவேல் இந்தச் சொத்திலே பாதியைவைச்சுட்டு செத்துப் போகும்போது என்ன சொன்னாரு தெரியுமா?என் மகன் மணிவேலனுக்கு வயிர வியாபாரத்தைப் பத்திச் சொல்லிக்குடுன்னுதான் சொன்னாரு...நீ வியாபாரத்தைக் கவனிக்காம விளையாட்டுலியே பொழுதைப் போக்குறே.

மணி : காலேஜ் படிப்பு முடியுறவரைக்கும் கடைபக்கம் வரவேண்டாம்ன்னு நீங்கதானே மாமா சொன் னீங்க?

அம் : ஒரு பேச்சுக்குச் சொன்னேன்...அடுத்தவன் ஏச்சுக்கு நான் ஆளாகாம இருக்கணும்னா நீ அடிக்கடி வியாபாரத்தைக் கவனிக்க வேணாமா?

மணி : அதென்ன மாமா அப்படிப் பேசறீங்க...எங்கப்பா என்னையே நம்பி உங்க பொறுப்பிலே விட்டிருக்காரு...நீங்களும் பிள்ளை மாதிரி வளக்குறீங்க. இதுலே இந்தச் சொத்துதானாப் பெரிசு!

அம் : அது சரி...அன்னத்தையே உனக்கு கட்டி வைச்சு எல்லாத்துக்கும் உன்னையே அதிபதி ஆக்கப் போறேன்...அதிருக்கட்டும். ஆனாப்பாரு. இந்த வருஷம் திடீர்ன்னு ரூபா இருபத்தஞ்சாயிரம் நஷ்டம் வந்திடுச்சி. இதை நீ நம்புவே... அடுத்தவன்!

மணி : அடுத்தவனா என்னை கவனிக்கிறான்...எதுக்கும் அங்கதான் அக்கவுண்ட் வைச்சிருக்கீங்களே... மாமா சும்மா மனசைக் குழப்பிக்காதீங்க. காலே ஜுக்கு நேரமாச்சு—வரட்டுமா—

(மணிவேலன் செல்கிறான்,)

அம் : இளம் கண்ணு பயமறியாது. இருபத்தஞ்சாயிரம் நஷ்டமின்னாலும், என் என்னன்னு கவலைப் படாமப் போறான்.

மெய் : நம்ம கணக்குப்படி அரை லக்ஷம் லாபமில்ல நிக்குது—

அம் : அது என்பங்கு வியாபாரத்திலேடா...இவன் பங்கு நஷ்டத்துலேதான் ஓடுது—

மெய் : இரண்டும் ஒரே கணக்குத் தானுங்களே—

அம் : மெய்யப்பா...ஐயப்பன் சத்தியமாச் சொல்றேன்...நீ அநாவசியமா தலையிடுறே—மரியாதையாச் சொல்றேன். நான் சொன்னதை வாங்கிட்டு சுருக்கா கடைக்கு வா—

(போகிறார்)

மெய் : பயங்கரமான ஆளு...பயங்கரமான ஆளு...வீர சைவம்ன்னு ஊரு பூரா சொல்லிட்டு...ஒரு பிளேட் புலவு வேணுமாம் புலவு—காலமய்யா காலம்—

காட்சி : 7 இடம் .. வீதி

பாத்திரங்கள் : 1. அப்டுடேட், 2. முத்தய்யன்
3. போலீஸ், 4. பெரியநாயகம்.

(அப்டுடேட்டும் முத்தய்யனும் வருகிறார்கள்.)

அப்டுடேட் : நல்ல ஆளப்பா நீ...

முத்தய்யன்: ஏன்?

டேட் : இரக்க மனசுள்ளவன் கசாப்புக்கடை வைக்க முடியுமா? அதுக்கு இரும்பு மனசு வேணும்பா!

முத் : எதுக்காக அப்படிச் சொல்றே?

டேட் : உனக்குத்தான் ரத்தத்தைக் கண்டா மயக்கம் வருதே, நீ வந்து இந்தத் தொழில்லே இறங் கலாமா?

முத் : ஆனா மயக்கம் வருது...அப்டுடேட்!நான் திருடன். ஆமா இதுவரை ஒருத்தனைக் காயப்படுத்தியதே இல்லை. என் உடல் வலிமையை உபயோகிச்சு யாருடைய பொருளையும் திருடல்லே...என் வாழ்க்கையிலே தவறு செய்யாமியே ஜெயிலுக்குப் போனேன்...இப்ப தவறு செய்யப்போறேன்...

டேட் : உனக்கு ஏன் ரத்தத்தைக் கண்டா...மயக்கம் வருது...

முத் : அது...அது...

(போலீஸ்காரன் ஒருவன் வருவதைக் கண்டு திரும்பி நிற்கிறான்—அப்டுடேட் தெரியா தவன்போல் தள்ளி நிற்கிறான்.)

போலீஸ்: டேய்...என்னடா ஒரு மாதிரியா நிக்குறே...

டேட் : ஒண்ணுமில்லீங்க...சும்மா அப்படி...

போ : நீ சும்மா அப்படி நிண்ணே ஜேப்படி பண்ணுவியே ..சார் உங்க பர்ஸ் பத்திரம். பய ஒரு தினுசா முழிக்கிறான்.

டேட் : நீங்க வேறே...நான் இப்ப அந்தத் தொழிலையே விட்டுட்டேனே—

(முத்தய்யன் செல்கிறான்.)

போ : இப்ப எந்தத் தொழில்லே இருக்கீங்க...

டேட்: இப்ப...காய்ச்சுறேன்.

போ : காய்ச்சுறியா......

டேட்: ஆமாங்க...அதுதான் நமக்கு இப்பநல்ல பிசினஸ்...

போ : டேய் என்ன தைரியம் உனக்கு. இந்தப் போலீஸ் பொன்னுசாமிக்கிட்டியே போஸ் குடுத்துப் பேசுற, வாடா ஸ்டேஷனுக்கு—

டேட் : எதுக்கு—

போ : நீதான் காய்ச்சுறியே......

டேட் : நான் என்ன சொல்றேன் நீங்க வந்து—

போ : டேய் என்னடா காது குத்துறே!

டேட்: அது நான் இல்லே. எங்கப்பா. அவருக்கு காது குத்துற வேலைதான்...

போ : ஏலேய்...பத்து கொலை செஞ்ச ரௌடி ரத்தினத்தையே ஒரே குத்துலே ரத்தம் கக்க வைச்சவன் இந்தப் பொன்னுசாமி...பத்திரமா பேசு. மரியாதையா சொல்றேன் நட ஸ்டேஷனுக்கு—

(கழுத்தில் பிடிக்கிறான்.)

டேட் : சார் கழுத்திலே எல்லாம் கைபோடாதீங்க...சார் நான் டீசன்ட் பிசனஸ்மேன்—

போ : ஏண்டா கள்ளச்சாராயம் காய்ச்சுற நீயா டீஸன்ட் மனுஷன்...தொலை...தொலைச்சிடுவேன்.

டேட்: சாராயமா...என்ன சார் இது அபாண்டமா பழி சுமத்துறீங்க...நான் பழைய கார் பேட்டரியில் இருந்து ஈயத்தைக் காய்ச்சி எடுத்து விக்கிறேன் சார்ன்னா—

போ : என்னது பேட்டரியில் இருந்து ஈயமா?

டேட்: அதெப்படி உங்களுக்குத் தெரியும். கண்டம்டு பேட்டரியை குறைஞ்ச விலைக்கு வாங்கி அதுல உள்ள செல்களெல்லாம் பிரிச்சு எடுத்து காய்ச்சினா... ஈயம் வரும் சார்.

போ : அது கரக்ட். இந்த மாதிரி ஒவ்வொருத்தனும் திருந்தி கைத்தொழில் செஞ்சா எவ்வளவு நல்லாயிருக்கும்,

டேட் : அதெப்படீங்க? ஊருல இருக்கிற திருடன் எல்லாம் நல்லவனா மாறிட்டா அப்புறம் உங்களுக்கு ஏது வேலை... நீங்களும் கைத்தொழில் செய்யவேண்டியதுதான்.

போ : அது சரி! நீ பழைய கைத்தொழிலை ஆரம்பிச்சே கையை ஒடிச்சிடுவேன் ஆமா—

டேட் : நான் புதுக் கைத்தொழில் ஆரம்பிச்சுட்டேனே. தைரியமா போங்க சார். நான் தப்பு செய்ய மாட்டேன்.

(போலீஸ்காரர் போகிறார் அப்டுடேட் சல்யூட் அடிக்கிறான். பரபரப்புடன் அங்கு வந்த முத்தய்யன்.)

முத் : டேய் ஆபத்து...ஆபத்து...போ...

டேட் : ஆபத்தை இப்பத்தானே, இந்தப் பக்கமா அனுப்பிச்சேன்.

முத் : அதுல்லேடா அப்பா...வா...

டேட் : அப்பாவா? அவரு செத்து ஏழு வருஷம் ஆச்சே!

முத் : எங்கப்பாடா...

டேட் : உங்கப்பாவா...வா...வா...அவரு போலீசைவிட மோசமானவராச்சே!

(இருவரும் செல்கிறார்கள், பெரியநாயகம் வருகிறார். அங்கும் இங்கும் பார்த்துவிட்டு—)